### வழக்கறிஞராக மட்டுமின்றி – தேர்தல் நடைமுறைகளை உடன்பிறப்புகளுக்கு வகுப்பெடுக்கும் ஆசிரியராக

# கழகத்துக்குப் பெருமை சேர்க்கும் என்.ஆர்.இளங்கோவின் பணிகளைப் போற்றுவோம்!

## இராகவி இளங்கோ – சச்சிந்தர் திருமண விழாவில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை,ஆக.31-**

**சென்னை நீலாங்கரையில், கழகத்தின் சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோவின் மகள் இராகவி இளங்கோ - சச்சிந்தர் இணையரின் திருமணத்தை, முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் நடத்தி வைத்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று மணமக்களை வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``வழக்கறிஞராக மட்டுமின்றி, தேர்தல் நடைமுறைகளை உடன்பிறப்புகளுக்கு வகுப்பெடுக்கும் ஆசிரியராக கழகத்துக்குப் பெருமை சேர்க்கும் அண்ணன் இளங்கோவின் பணிகளைப் போற்றுவோம். இல்வாழ்வில் இணைகின்ற இராகவி - சச்சிந்தர் இணையர், கழகமும் - கலைஞரும் போல, முதலமைச்சர் அவர்களும் - வெற்றிகளும் போல பல்லாண்டு வாழ்க" என வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இந்தத் திருமண விழா அண்ணன் என்.ஆர். இளங்கோ அவர்களின் வீட்டு விழாவாக மட்டுமல்லாமல், நம் இல்லத் திருமண விழாவாக, கழகத் திருவிழாவாக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, நான் உள்ளே வந்தபோது எனக்கு ஒரு சிறிய சந்தேகமே வந்துவிட்டது. நாம் திருமண மண்டபத்துக்குத்தான் வந்திருக்கிறோமா, இல்லை பார் கவுன்சிலுக்கு வந்துவிட்டோமா என்ற சந்தேகம் வந்துவிட்டது. அந்த அளவுக்கு இங்கு சட்டத்துறையைச் சேர்ந்தவர்களும், வழக்கறிஞர்கள் பலரும் மணமக்களை வாழ்த்துவதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்.

**கழகக் குடும்பம்**

அண்ணன் என்.ஆர்.இளங்கோவைப் பற்றி, உங்களிடம் சொல்லத் தேவையில்லை. அவர் பாரம்பரியமிக்க கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சட்டக் கல்லூரி மாணவராக இருந்தபோதே தலைவர் கலைஞர் அவர்களாலும், நம் தலைவர் அவர்களின் கொள்கைளாலும் ஈர்க்கப்பட்டு, அரசியலில் ஈடுபடத் தொடங்கியவர்தான் அண்ணன் என்.ஆர். இளங்கோ அவர்கள்.

பொதுவாகவே, தி.மு.க.-வின் கடைக் கோடி தொண்டனிடம்கூட பேசி வெற்றி பெற முடியாது. எல்லோரும் மிகப்பெரிய பேச்சாளர்கள், சிறப்பாக வாதாடுவார்கள், அனைவரும் வழக்கறிஞர் மாதிரி பேசுவார்கள் என்ற எண்ணம் பொதுமக்களிடம் உண்டு. அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள் இன்றைக்கு நாட்டிலேயே மிகப்பெரிய வழக்கறிஞர். அதனால்தான் அவர் கழகத்திற்காக எப்போது நீதிமன்றப் படிக்கட்டு ஏறினாலும், வெற்றியை மட்டுமே பெற்றுத் திரும்பி வந்துகொண்டு இருக்கிறார். கழகத்திற்கோ, எந்த உடன்பிறப்புகளுக்கோ நீதிமன்றம் அல்லது சட்ட நடவடிக்கைகள் என்று ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால், தலைவர் அவர்கள் எப்போதுமே சொல்வது, 'தயவுசெய்து என். ஆர்.இளங்கோவிடம் ஆலோசித்து விடுங்கள்' என்றுதான் உத்தரவிடுவார்கள். அந்த அளவுக்கு தலைவரின் நம்பிக்கையையும், அன்பையும் பெற்றவர்தான் அண்ணன் என்.ஆர். இளங்கோ.

**கண்டிப்பான தலைமையாசிரியர்**

நீதிமன்றத்தில் மட்டும்தான் அவர் வழக்கறிஞர். ஆனால், அண்ணா அறிவாலயத்தைப் பொறுத்தவரைக்கும் அவர் ஒரு பள்ளித் தலைமையாசிரியர் போல. கழக பூத் பொறுப்பாளர்களுக்கு எல்லாம் தேர்தல் நடைமுறைகள் பற்றி வகுப்பு எடுக்கின்ற ஒரு சிறந்த கண்டிப்பான தலைமையாசிரியர்தான் அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள். தேர்தலுக்கு ஒரு வருடத்துக்கு முன்பே, அண்ணனின் தேர்தல் பணிகள் தொடங்கிவிடும்.

குறிப்பாக, 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்கள்தான் இருக்கின்றன. ஆனால், அவர் இப்பொழுதே தமிழ்நாடு முழுவதும் பயணித்துக்கொண்டு இருக்கிறார். இந்தியாவின் தேர்தல் ஜனநாயகம், பீகாரில் ஏற்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் குளறுபடியால், இன்றைக்கு மிகப்பெரிய ஒரு கேலிக்கூத்தாக விளங்கிக்கொண்டு இருக்கிறது. அதுமாதிரி ஒரு முறைகேட்டை தமிழ்நாட்டில் நினைத்துக்கூட பார்க்க முடியாது என்பதற்கு அண்ணன் என்.ஆர்.இளங்கோ போன்றவர்கள் நம் கழகத்திற்கு நடத்துகின்ற பாடங்களே முக்கியக் காரணம்.

இன்றைக்கு, சிறப்புத் தீவிர திருத்தப் பட்டியல் நடவடிக்கையும், ஓட்டுத் திருட்டு குற்றச்சாட்டையும் நாடு முழுக்க மக்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இதனை நான்கு மாதங்களுக்கு முன்பே கண்டறிந்து நம்மையெல்லாம் எச்சரித்தவர்தான் அண்ணன் என். ஆர்.இளங்கோ அவர்கள். அந்த அளவுக்கு தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள், விதிமுறைகளை எல்லாம் தன் விரல் நுனியில் வைத்துக்கொண்டு கழகத்தின் கேடயமாக விளங்குபவர்தான், அண்ணன் என்.ஆர். இளங்கோவன்.

இன்றைக்கு பல இயக்கங்கள், கட்சிகள், 'வார் ரூம்', 'வார் ரூம்' என்று பெருமையாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், கழகத்திற்காக 2016-ஆம் ஆண்டு தேர்தலில் நம் தலைவரின் வழிகாட்டலின் பேரில், முதன்முதலில் அறிவாலயத்தில் வார் ரூம் அமைத்தவர் அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள். அவருக்கே அந்தப் பெருமையும் சேரும்.

ஆளுங்கட்சியாக இருக்கும்போது மட்டுமல்ல, எதிர்க்கட்சியாக இருந்தபோதும் கழக உடன்பிறப்புகள் மீது போடப்படுகின்ற பொய் வழக்குகளையெல்லாம் உடைத்தெறிந்தவர்தான் அண்ணன் என்.ஆர். இளங்கோ அவர்கள். அண்ணனின் இந்தப் பணிகள் தமிழ்நாட்டுடன் சுருங்கிவிடக் கூடாது என்று, இந்த நேரத்தில் நம் தலைவர் அவரை டெல்லிக்கு மாநிலங்களவை உறுப்பினராக அனுப்பி வைத்துள்ளார்கள். நாடாளுமன்றத்தில் எப்போதெல்லாம் ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்கள் விரோத சட்டங்களைக் கொண்டு வர முயற்சிக்கிறதோ, அப்போதெல்லாம் நம் கலைஞரின் குரலாக, கழகத்தின் குரலாக, தலைவரின் குரலாக அங்கே அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள் ஒலித்துக்கொண்டு இருக்கிறார். அப்படிப் பட்ட அண்ணன் அவர்களின் இல்லத் திருமண விழாவில் பங்கேற்பதில் மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

**நமக்கு ஒரு இலக்கு**

இன்னும் 7 மாதங்களில் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. அண்ணன் என்.ஆர். இளங்கோவுக்கும், நமக்கும் நிறைய பணிகள் காத்திருக்கின்றன. நம் தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்து இருக்கிறார். குறைந்தது, நம் தி.மு.க. தலைமையிலான அணி 200 தொகுதிகளில் வெற்றிபெற்று காட்ட வேண்டும் என்ற இலக்கைக் கொடுத்திருக்கிறார்.

ஆகவே, 2026-இல் ஏழாவது முறையாக நம் கழக அரசு ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம் கழகத் தலைவர் தொடர்ந்து 2-வது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டுமென்றால், நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கி செயல்பட வேண்டும். அந்த உறுதிமொழியை, இந்தத் திருமண விழாவில் ஏற்போம் என்று கூறிக்கொள்கிறேன்.

இந்தத் திருமண விழாவில் கலந்துகொள்வதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி. அதற்குக் காரணம், இது ஒரு காதல் திருமணம். மணமகன் மணமகளுக்கு தாலியை அணிவிக்கும்போதே இருவரும் கண்ணால் பேசிக்கொண்டார்கள். ``நான் சொன்னதை செய்து காட்டிவிட்டேன் பார்த்தாயா! என்று மணமகள் கேட்க, அதற்கு நான் நன்றாக மாட்டிக்கொண்டேன்" என்று மணமகன் சொன்னவையும் எனக்கு கேட்டன. எனவே, இது காதல் திருமணம். அவர்களுக்கு அதிக அறிவுரை கூற நான் விரும்பவில்லை.

மணமக்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழ வேண்டும். விட்டுக் கொடுக்க வேண்டியவைகளுக்கு விட்டுக் கொடுத்து, விட்டுக் கொடுக்கக் கூடாதவைகளுக்கு விட்டுக் கொடுக்காமல், நல்ல நண்பர்களாக வாழ வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

---

### 2025 – 26 கொள்முதல் பருவத்தில் –

# செப்.1 முதல் நெல் கொள்முதல் தொடங்க - முதல்வர் ஆணை!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

**சென்னை, ஆக.31-**

**2025-26 கொள்முதல் பருவத்தில் 1.9.2025 முதல் நெல் கொள்முதல் தொடங்க முதலமைச்சர் அவர்கள் ஆணை வெளியிட்டுள்ளார் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு :-

முதலமைச்சர் அவர்கள் 1.9.2025 முதல் சன்னரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2545/- மற்றும் பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2500/- என்ற விலையில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படும் என்று ஆணையிட்டுள்ளார்கள். இதில் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகை குவிண்டால் ஒன்றிற்குச் சன்னரகத்திற்கு ரூ.156/- மற்றும் பொதுரகத்திற்கு ரூ.131/- ஆகும். திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் ஒரு குவிண்டால் நெல்லிற்கு ரூ.2500/- வழங்குவோம் என்று குறிப்பிட்டதை நிறைவேற்றியுள்ளோம் என்பதைத் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு நம் முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் இன்று (29.08.2025) வரை 2024-25 நெல் கொள்முதல் பருவத்தில் 47.97 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நம் முதல்வர் அவர்களின் 51 மாத கால ஆட்சியில் இது வரை மொத்தம் 1.85 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 44,777.83 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக மட்டும் ரூ.2,031.29 கோடி வழங்கப் பட்டுள்ளது.

செப்டம்பர் மாதமே அக்டோபரில் தொடங்கும் பருவ விலையில் நெல் கொள்முதல் செய்திட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதி, அனுமதி பெற்று 2022-2023 ஆண்டு முதல் செப்டம்பரிலேயே கொள்முதல் செய்யப்பட்டு வருவதுபோல் இந்த ஆண்டும் செப்டம்பர் முதல் நாளிலிருந்து கொள்முதல் செய்யப்படும்.

"ஒரு நெல் மணி கூட வீணாகக் கூடாது" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி நெல்லைத் திறந்த வெளியில் வைக்காமல் சேமித்திட இந்தியாவில் எங்குமில்லாத அளவிற்கு மேற்கூரையுடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்கள் கட்ட ஆணையிட்டார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்கள் உரிய நிதியை ஒதுக்கினார்கள்.



333 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட 4 இலட்சத்து 3 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 26 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன.

25 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் 18 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 நெல் சேமிப்பு வளாகங்கள் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

2025 - 2026 ஆம் ஆண்டில் டெல்டா மாவட்டங்களில் 2 இலட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 20 நவீன சேமிப்பு வளாகங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 49 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 நவீன சேமிப்பு வளாகங்கள் என ஆக மொத்தம் 3 இலட்சத்து 12 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 26 நவீன சேமிப்பு வளாகங்கள் 469 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட அரசாணை வெளியிடப்பட்டு, அவற்றைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆக மொத்தம் இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல் இதுவரை விவசாயிகளின் நலனை முன்னிறுத்தி ரூபாய் 827 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் 7 இலட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் கட்டுவதற்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் வருங்காலங்களில் திறந்த வெளியில் நெல்லைச் சேமிக்க வேண்டிய தேவை எழாது. இந்த ஆண்டு நெல்வரத்து அதிகமாக வரலாறு காணாத வகையிலிருந்தாலும் எதிர்பாராது அடிக்கடி மழை பெய்தபோதும் நெல்மணிகள் மழையில் நனையாமல் காப்பாற்றப் பட்டுள்ளன. அதேபோன்று வருகின்ற 2025-26 பருவத்தில் நெல் கொள்முதலைச் செப்டம்பர் முதல் நாளிலிருந்து தொடங்கிட அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தேவைப்படும் இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் விரைந்து திறந்திடவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

நெல் கொள்முதல் மையங்களிலிருந்து நேரடியாக அரிசி அரவை ஆலைகளுக்கு நெல்லை அனுப்பிடவும் சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து நெல் விவசாயிகளும் புதிய விலையில் நெல்லினை விற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு, அவ்வறிக்கையில் அமைச்சர் அர.சக்கரபாணி குறிப்பிட்டுள்ளார்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு 26.08.2025 அன்று திருச்சிராப்பள்ளி, அண்ணா விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து, விளையாட்டு வீரர்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.சேஷத்ரிமயும் தீபி சானு, மாவட்ட நகர் ஊரமைப்புக்குழு உறுப்பினர் க.வைரமணி, மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி.ஞான சுகந்தி, மண்டல முதுநிலை மேலாளர் செந்தில்குமார், விளையாட்டு விடுதியின் மேலாளர் கண்ணன், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் நகர் பகுதியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் விரிவாக்கத்தை சென்னையில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வினை பெரம்பலூர் தந்தை ஹேண்ஸ் ரோவர் தொடக்கப்பள்ளியில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். அருண்நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் ஆகியோர் நேரலையில் பார்வையிட்டு பின்பு மாணவர்களுக்கு காலை உணவு உணவினை வழங்கி, மாணவர்களுடன் அமர்ந்து சிற்றுண்டி சாப்பிட்டனர். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ரோவர் கல்வி நிறுவனங்கள் தலைவர் க.வரதராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், நகர்மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், நகர் மன்ற துணைத் தலைவர் து.ஆதவன்,மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், உள்ளிட்டோர் உள்ளனர்.

---

### திருப்புவனம் அருகில் வைகை ஆற்றங்கரைப் பகுதியில் "உங்களுடன் ஸ்டாலின்"

# திட்ட முகாம் தொடர்பான 6 நகல் மனுக்கள்: சட்ட நடவடிக்கைகள்!

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தகவல்!

சிவகங்கை, ஆக.31-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகில் வைகை ஆற்றங்கரை பகுதியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடர்பான மனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதனடிப்படையில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் தலைமையில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதில், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் தொடர்பாக அப்பகுதியில் பெறப்பட்ட மனுக்களில் பட்டா மாறுதல் வேண்டி அளிக்கப்பட்ட மனுக்கள் மீது, உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்ட 6 மனுக்களின் நகல்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக பெறப்பட்ட 7 மனுக்களின் நகல்கள் ஆகியவைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தற்போது தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட மனுக்களின் நகல்கள் வெளி வந்தது தொடர்பாக கடந்த இரண்டு தினங்கள் திருப்புவனம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர்களிடம் உரிய விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இவை தொடர்பாக, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் புகார் மனுவும் அளிக்கப்பட்டுள்ளது. அரசிற்கு களங்கம் விளைவிக்கும் வகையில், இதுபோன்று சமூக விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளோர் மீது, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு விசாரணைகள் நடைபெற்று வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.